# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 10 | புவியியல் - I,II<br>Geography- I,II | நேரம்:<br>3.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................

மேலதிக வாசிப்பு நேரம் : 10 நிமிடம்

வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

### புவியியல் I

- இவ் வினாத்தாள் **40** வினாக்களைக் கொண்டுள்ளது.
- ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப **எல்லா** வினாக்களுக்கும் **இவ் வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

□ **01**தொடக்கம் **05** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்துப் **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

1) புவியோட்டின் தடிப்பானது கண்டங்களில் .................................... கிலோமீற்றர் வரையான ஆழம்வரை விரிவடைந்துள்ளது. ( 5, 60, 65)

2) உலகின் மொத்த நீர்ப்பரம்பலில் மனிதன் பயன்படுத்தக் கூடிய அளவு.......................... ஆகும். (1%, 2.5%, 21%)

3) பால்ரிக் கடல், மஞ்சள் கடல் என்பன ................................. கடல்களாகும். (முழுவதும் நிலத்தால் சூழப்பட்ட, பகுதியளவு நிலத்தால் சூழப்பட்ட, சமுத்திரத்துடன் இணைவைக் கொண்ட)

4) இலங்கையின் மேல்மாகாணத்தில் அமைந்துள்ள பொரலஸ்கமுவ என்னும் இடத்தில் பீங்கான் உற்பத்திக்குப் பயன்படும் .................. படிவு காணப்படுகின்றது. (பந்துக்களி, வெண்களி, கருங்களி)

5) உலகில் ................................. வலயப் பகுதிகளில் பாற்பண்ணைகள் அதிகளவில் பரம்பிக் காணப்படுகின்றது. (வெப்ப, இடைவெப்ப, குளிர்)

□ 06 தொடக்கம் 10 வரை தரப்பட்ட கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் ‘**ச**’ வையும் பிழையாயின் ‘**பி**’ யையும் **சுற்றி வட்டம் வரைக.**

6) மாடிக் கட்டடங்கள் மற்றும் பாரிய நீர்த்தேக்கங்கள் அமைக்கப்படுவதனால் கற்கோளத்தின் சமநிலை பாதிப்படைகிறது. ச/பி



kalvi.lk

7) கண்டங்களின் எல்லையிலிருந்து சமுத்திரத்தை நோக்கி பரந்துள்ள ஆழங்குறைந்த கடற்பரப்பு கண்டச்சாய்வு எனப்படும். ச/பி

8) ஆசிய நாடுகளில் வாழும் பெரும்பான்மையான மக்களின் பிரதான உணவுத்தானியப் பயிராக கோதுமை காணப்படுகிறது. ச/பி

9) இலங்கையில் பால்தரும் பசுக்களைப் பரிமாறிக் கொள்வதற்கு மீவனபலன வளமத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. ச/பி

10) இலங்கையின் மைக்ரோ மோட்டார் வாகனம் பொருத்தும் தொழிற்சாலை பொல்காவலையில் அமைந்துள்ளது. ச/பி

 **11** தொடக்கம் **16** வரையுள்ள வினாக்களில் உள்ள **வெற்றிடங்களை பொருத்தமான** சொற்களைக் கொண்டு பூரணப்படுத்துக.

11) புவியின் மேற்பரப்பின் பரப்பளவு ……………………. மில்லியன் சதுர கிலோமீற்றர்களாகும்.

12) தென் அமெரிக்காவின் அமேசன் மற்றும் ……………………… இன் கொங்கோ என்பன அயனமண்டலக் காடுகளாகும்.


13) உலகில் அதிக விளைச்சல் தரும் புதிய கோதுமை இனமாக ……………………… காணப்படுகின்றது.

14) சர்வதேச சுனாமி எச்சரிக்கை நிலையம் அமைந்துள்ள ஹவாய்த் தீவு ……………. சமுத்திரத்தில் அமைந்துள்ளது.

15) மலைப்பாங்கான பகுதிகளில் நிலத்தின் சாய்வுக்கு ஏற்ப ……………………………… நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

16) இலங்கையின் விவசாய தொழில்நுட்பப் பூங்கா …………………என்னும் இடத்தில் அமைந்துள்ளது.

 தரப்பட்டுள்ள வரைபினைப் பயன்படுத்தி 17 தொடக்கம் 19 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.




17) வரைபின்படி …………… கண்டம் உலகில் அதிகளவு இலத்திரனியல் உபகரணங்களை உற்பத்தி செய்கிறது.

18) வரைபின்படி உலகில் அதிகளவு இலத்திரனியல் உபகரணங்களை உற்பத்தி செய்யும் நாடாக ……………… காணப்படுகின்றது.

19) வரைபின்படி உலகில் குறைந்தளவு இலத்திரனியல் உபகரணங்களை உற்பத்தி செய்யும் ஆசியநாடு ……........................ ஆகும்.

□ 20 தொடக்கம் 24 வரையுள்ள "அ" மற்றும் "ஆ" என இரண்டு நிரல்கள் தரப்பட்டுள்ளன. இந்நிரலில் உள்ளவற்றை அவற்றின் தொடர்புகளின் அடிப்படையில் பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடையினது இலக்கத்தை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

20) "அ" / "ஆ"

| **கண்டமேடை** | **அமைந்துள்ள தீவு** |
|---|---|
| 1. ஆசியாக் கண்டமேடை | A – தஸ்மேனியா |
| 2. அவுஸ்திரேலியாக் கண்டமேடை | B – கியூபா |
| 3. ஆபிரிக்காக் கண்டமேடை | C – போர்னியோ |
| | D – மடகாஸ்கார் |

1.CAD 2.CBA 3.BAD 4.CBD (……)

21) "அ" / "ஆ"

| **கண்டங்கள்** | **ஏரிகள்** |
|---|---|
| 1. ஐரோப்பா | A – விக்டோரியா |
| 2. ஆசியா | B – லடோகா |
| 3. ஆபிரிக்கா | C – பைக்கால் |
| | D – அயர் |

1. CDA 2. DCB 3. BCA 4. DAC (……)

22) "அ" / "ஆ"

| **வடிநிலங்கள்** | **நெல் உற்பத்தி நாடுகள்** |
|---|---|
| 1. போ | A - வட அமெரிக்கா |
| 2. சக்ரமென்டோ | B – அவுஸ்திரேலியா |
| 3. மறேடாலிங் | C – ஆபிரிக்கா |
| | D – இத்தாலி |

1. DCB 2.CBD 3.CDB 4. DAB (……)

23) "அ" / "ஆ"

| **கைத்தொழில் நாடு** | **இரும்புருக்கு உற்பத்தி மையம்** |
|---|---|
| 1. ஐக்கிய அமெரிக்கா | A – சான்சிங்வான் |
| 2. ஜப்பான் | B – லங்காசயர் |
| 3. ஐக்கிய இராச்சியம் | C – யொக்கஹாமா |
| | D – டெற்றோயிட் |

1.CDA 2.DCB 3. CDB 4. DBA (……)


kalvi.lk

24) "அ" "ஆ"

| கனிய வகை | கைத்தொழில் உற்பத்தி |
|---|---|
| 1. வெண்களி | A – வார்ப்பு அச்சு |
| 2. காரீயம் | B – சுகாதாரப் பொருட்கள் |
| 3. மைக்கா | C – ஆபரண உற்பத்தி |
| | D - இலத்திரனியல் உபகரணங்கள் |

1. BCA 2. BCD 3. DCB 4. BAD (……)

 25 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தினை எதிரே உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

25) புவியோட்டிலிருந்து மூடியைப் பிரிக்கும் எல்லையாக அமைவது.

1. கூற்றன்பேர்க் எல்லை 2. கொன்றாட் எல்லை
3. லேமன் எல்லை 4. மொகோறோவிசிக் எல்லை (……)

26) மின்னியக்கச் செயற்பாடுகள் இடம்பெறும் வளிமண்டலப்படையாக அமைவது.

1. மாறன் மண்டலம் 2. படை மண்டலம்
3. இடை மண்டலம் 4. வெப்ப மண்டலம் (……)

27) இலங்கையில் புதிதாக இறப்பர் பயிர்ச்செய்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இரு மாவட்டங்களும் எவை?

1. கேகாலை, இரத்தினபுரி 2. வவுனியா,முல்லைத்தீவு
3. முல்லைத்தீவு, கிளிநொச்சி 4. வவுனியா, மொனராகலை (……)

28) மிளகாய்ப் பயிர்ச்செய்கைக்கான ஏற்றுமதிக் கிராமம் அமையப்பெற்றுள்ள இடம்.

1. ராஜாங்கன 2. தம்பதெனியா
3. கட்டுகம்பொல 4. குருணாகல் (……)

29) சர்வதேச சமுத்திரச் சட்டத்தின்படி இலங்கையின் தனித்துவமான பொருளாதார வலயமாக அமையும் கடல் பகுதி,

1. 0 தொடக்கம் 12 கடல்மைல் 2. 12 தொடக்கம் 24 கடல்மைல்
3. 24 தொடக்கம் 200 கடல்மைல் 4. 200 கடல்மைல் மேல் (……)

30) ➢ $27^{o}$ க்கு மேற்பட்ட வெப்பநிலை.
➢ 2000 mm மழைவீழ்ச்சி.
➢ செம்பூரான் மண்

மேற்குறிப்பிட்ட கூற்றுக்களுக்கு பொருத்தமாக அமையும் பயிர்ச்செய்கை.

1. நெல் 2. தேயிலை 3. தென்னை 4. இறப்பர் (……)

31) இலங்கையின் மலைநாட்டுப் பிரதேசத்தில் பயிரிடப்படும் மரக்கறிகளாவன.

1. பயற்றங்காய், புடோலங்காய், பீர்க்கங்காய் 2. முருங்கைக்காய், பூசணிக்காய், கத்தரி
3. லீக்ஸ், கோவா,நோக்கோல் 4. கரட், முருங்கைக்காய், பீர்க்கங்காய் (……)

32) வர்த்தக ரீதியில் இறால், நண்டு வளர்க்கப்படும் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களாவன.

1. மன்னார், அம்பாந்தோட்டை 2. நீர்கொழும்பு, புத்தளம்
3. பேருவளை, முந்தல் 4. யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை (……)

33) இலங்கையின் மத்தியமலைநாட்டில் அமைந்துள்ள பாற்பண்ணையை விருத்தி செய்வதற்கான ஆராய்ச்சி நிலையம் எது?

1.கனன்வில 2. அம்பேவல 3. கன்னொருவ 4. வல்விட்ட (……)

34) இலங்கையில் ரட்டவடுன்ன என்னும் இடத்தில் அமையப்பெற்றுள்ள குடிசைக் கைத்தொழில்.

1. றேந்தை பின்னல் 2. பித்தளை அலங்காரப் பொருட்கள்
3. பிரம்பு வேலைகள் 4. தளபாடப் பொருட்கள் (……)

35) ஒரு குறிப்பிட்ட விடயம் பற்றிய தகவல்களை மாத்திரம் முன்வைப்பதற்கு அமைக்கப்படுகின்ற படம்.

1. கருப்பொருட் படம் 2. இடவிளக்கப் படம்
3. தொலைநுணர்வு படம் 4. தேசப்படம் (……)

36) காலி மாவட்டத்தினுள் இலத்திரனியல் கைத்தொழில் நிலையம் அமைந்துள்ள முதலீட்டு ஊக்கிவிப்பு வலயம் எது?

1. கட்டுநாயக்கா 2. பியகம
3. அம்பலாங்கொட 4. கொக்கல (……)

➢ A,B,C,D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய தலைப்புக்களின் சோடிகளை நன்கு அவதானித்து 37 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

A 1. ஓசோன்படை தேய்வு
2. புற ஊதாக்கதிர்கள் புவியை அடைதல்

B 1. மண்ணரிப்பு
2. பயிர் விளைச்சல்

C 1. சுவட்டு எரிபொருள் பயன்பாடு
1. இயற்கை வளம்

D 1. காபனீரொட்சைட் வாயு
2. காடழிப்பு

37) முதலாவதன் அதிகரிப்பு இரண்டாவதன் வீழ்ச்சிக்கு காரணமாகும் தலைப்புச் சோடி.

1.A 2.B 3.C 4.D (……)

38) இரண்டாவதன் அதிகரிப்பு முதலாவதன் அதிகரிப்புக்கு காரணமாகும் தலைப்புச் சோடி

1.A 2.B 3.C 4.D (……)

39) முதலாவதன் அதிகரிப்பு இரண்டாவதன் அதிகரிப்புக்கு காரணமாகும் தலைப்புச் சோடி.

1.A 2.B 3.C 4.D (……)

40) முதலாவதற்கும் இரண்டாவதற்கும் எந்த இணைவுமில்லாத தலைப்புச் சோடி.

1.A 2.B 3.C 4.D (……)

(40X1=40 புள்ளிகள்)



kalvi.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| | | |
|---|---|---|
| **தரம் - 10** | புவியியல் - II<br>Geography- II | |

**பெயர் / சுட்டெண்** ..........................................................................................

- இவ்வினாத்தாள் **I,II** என்னும் **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது
- பகுதி I இல் உள்ள வினா கட்டாயமானது. அதில் **(அ), (ஆ),( இ)** ஆகிய **மூன்று** பிரிவுகளுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.
- பகுதி II இல் இருந்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.
- எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு **விடை எழுத வேண்டும்.**

**பகுதி** - I

1) **(அ)** உமக்குத் தரப்பட்டுள்ள இலங்கையின் **1:50,000** அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப் படத்தின் பகுதியை நன்கு அவதானித்து , அதன் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. விடைகளை எழுதுவதற்கு உமக்கு வழங்கப்பட்டுள்ள தாளினைப் **(பக்கம் 9)** பயன்படுத்துக.

- (i) தொடக்கம் (iv) வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்குமான விடையை அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

(i) A எழுத்தினால் குறித்துக் காட்டப்படும் அம்சம் எது? (1 புள்ளி)
(முனை, மணல்தரை, பாறை)

(ii) B எழுத்து குறித்துநிற்கும் இளம் சிவப்பு நிறத்தினால் காட்டப்படும் பகுதி எது? (1 புள்ளி)
(சமவெளி, பாதுகாக்கப்பட்ட பகுதி, அமைக்கப்பட்ட பிரதேசம்)

(iii) C எழுத்து குறித்து நிற்கும் அம்சம் எது? (1 புள்ளி)
(சதுப்பு நிலம், கண்டல்தாவரம், புல்வெளி)

(iv) D எழுத்து குறித்துநிற்பது. (1 புள்ளி)
(சம உயரக் கோடு, சம ஆழக்கோடு, கடல் எல்லை)

- (v) தொடக்கம் (ix) வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையை எழுதுக.

(v) E எழுத்தினால் குறித்துக் காட்டப்படும் நிர்வாக எல்லை எது? (1 புள்ளி)

(vi) இப் பிரதேசம் இலங்கையின் எத் தரைத்தோற்ற வலயத்திற்குரியதாகும்? (1 புள்ளி)

(vii) படப்பகுதியில் காணப்படும் பிரதான பயிர்ச் செய்கை எது? (1 புள்ளி)

(viii) வினா vii இல் நீர் குறிப்பிட்ட பயிர்ப் பரம்பலை தீர்மானிக்கும் பௌதிகக் காரணி ஒன்றினை குறிப்பிடுக. (1 புள்ளி)

(ix) நாற்பக்கல் I இல் காணப்படும் பொதுச்சேவை வழங்கும் நிறுவனங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (2புள்ளிகள்)


kalvi.lk

**(ஆ)** உமக்குத் தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தினைக் கவனமாகப் பரிசீலித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்கு உலகப் படத்தின் அருகே அமைந்துள்ள நிரலைப் **(பக்கம் 10)** பயன்படுத்துக.

- (i) தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் முன்னால் மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. உலகப் படத்திலிருந்து ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையைக் குறித்துக் காட்டும் எழுத்தினைத் தெரிவு செய்து அதனை உலகப்படத்தின் அருகிலுள்ள நிரலில் ஒவ்வொரு வினா இலக்கத்திற்கும் எதிரே உள்ள கூட்டினுள் எழுதுக.

(i) ஐக்கிய அமெரிக்கா N,O,P
(ii) பிலிப்பைன்ஸ் தீவுகள் T,U,V
(iii) ராக்கன்ஸ்பேர்க் மலை D,E,F
(iv) அமேசன் நதி A,B,C
(v) மத்தியதரைக்கடல் K,L,M (5X1=5புள்ளிகள்)

**(இ)** உமக்குத் தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தினைக் கவனமாகப் பரிசீலித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக இலங்கைப் படத்துக்கு அருகிலுள்ள **(பக்கம் 10)** நிரலைப் பயன்படுத்துக.

- (i) தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் முன்னால் மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. இலங்கைப் படத்திலிருந்து ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையைக் குறித்துக் காட்டும் எழுத்தினைத் தெரிவு செய்து அதனை இலங்கைப்படத்தின் அருகிலுள்ள நிரலில் ஒவ்வொரு வினா இலக்கத்திற்கும் எதிரே உள்ள கூட்டினுள் எழுதுக.

(i) களனி கங்கை L,M,N
(ii) தங்காலை மீன்பிடித் துறைமுகம் A,B,C
(iii) பருத்தித்துறை முனை T,U,V
(iv) பெருமளவு நிலத்தில் நெற்செய்கை இடம்பெறும் மாவட்டமான குருநாகல் H,I,J
(v) இயற்கைத் துறைமுகம் அமையப்பெற்ற கொட்டியாரக்குடா Q,R,S

(5X1=5 புள்ளிகள்)

## பகுதி - II

2)

(i) வளிமண்டலத்தில் காணப்படும் படைகளில்,

a. மிக உயர்வான வெப்பநிலையைக் கொண்ட படை :

b. ஓசோன்படை அமைந்துள்ள வளிமண்டலப்படை :

என்பவற்றை முறையே குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) மாறன் மண்டலத்தின் பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)


(iii) நீரின் தரம் குறைவடைவதில் செல்வாக்குச் செலுத்தும் மனித நடவடிக்கைகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு **ஒன்றினை** சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)



kalvi.lk

3)

(i) தரப்பட்டுள்ள வரைபடத்தில் B மற்றும் C எழுத்துக்கள் குறித்து நிற்கும் உலகின் காலநிலை வலயங்களைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)




(ii) A என குறிப்பிட்ட காலநிலை வலயத்தின் விசேட பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(iii) உலகின் மனித நடவடிக்கைகளில் காலநிலை எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதற்கு **மூன்று** காரணிகளைக் குறிப்பிட்டு **ஒன்றினை** விளக்குக. (5 புள்ளிகள்)

4)

(i) உலகில் தேயிலை பயிரிடப்படும் ஆபிரிக்க நாடுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) தேயிலைப் பயிர்ச்செய்கைக்கு சாதகமான பௌதிகக் காரணிகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(iii) தேயிலைப் பயிர்ச்செய்கையின் விசேட பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

5)

(i) சிறு ஏற்றுமதிப் பயிர் என்றால் என்ன? (2 புள்ளிகள்)

(ii) இலங்கை அரசு சிறு ஏற்றுமதிப் பயிர் விருத்தியில் விசேட கவனம் செலுத்தி வருகின்றமைக்கான காரணங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(iii) a) இலங்கையின் விவசாயத்தில் உற்பத்தி சார்ந்த பிரச்சினைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக.

b) இலங்கைப் பொருளாதாரத்தில் விவசாயம் முக்கிய இடத்தைப் பெறுவதற்கான காரணம் **ஒன்றினைச்** சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

6)

(i) கப்பல் கட்டும் தொழிலில் தற்போது முன்னணி வகிக்கும் நாடுகள் **இரண்டு** தருக. (2 புள்ளிகள்)

(ii) வினா i இல் குறிப்பிட்ட நாடுகள் கப்பல் கட்டும் தொழிலில் முன்னணி வகித்தமைக்கான காரணங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)


(iii) உலகின் தயாரிப்புக் கைத்தொழில் சார்ந்து ஏற்படுகின்ற சமூக பொருளாதார பிரச்சினைகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினைச்** சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

7)

(i) தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் A,B எனக் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுலா வலயங்களைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

(ii) சுற்றுலாக் கைத்தொழில் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய பொருளாதார நன்மைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(iii) இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு சுற்றுலாக் கைத்தொழிலை மேலும் விருத்தி செய்வதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கை **ஒன்றினைச்** சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)



**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
Provincial Department of Education – Northern Province

**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2022 (2023)**
Third Term Examination – 2022 (2023)

| | | |
|---|---|---|
| தரம் :- 10<br>Grade : - 10 | புவியியல் - II<br>Geography- II | |

சுட்டெண்/பெயர்:-……………………….

பரீட்சகரின் உபயோகத்திற்கு

1.(அ)

(i) ……………………………………………………………………………………

(ii) ……………………………………………………………………………………

(iii) ……………………………………………………………………………………

(iv)……………………………………………………………………………………

(v) ……………………………………………………………………………………

(vi)……………………………………………………………………………………

(vii)……………………………………………………………………………………

(viii) ……………………………………………………………………………………

(ix) ……………………………………………………………………………………

……………………………………………………………………………………

10


kalvi.lk

வினா – 1.(ஆ)




(i)

(ii)


(iii)

(iv)

(v)

5

வினா – 1.(இ)




(i)

(ii)

(iii)

(iv)

(v)

5

மாகாணக் கல்வித் திணைக்களம் வடக்கு மாகாணம்

Provincial Department of Education – Northern Province

மூன்றாம் தவணைப் பரீட்சை - 2022 (2023)

| | | |
|---|---|---|
| தரம் :- 10<br>Grade : - 10 | புவியியல் -II<br>Geography - II | |




SCALE : 1 : 50 000



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT,  B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)

**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**



Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page